**35. அநுமான் கதை (4)**

சீதையைத்தேடிச் சென்ற அநுமான் கடலைத்தாண்டி இலங்கையை அடைந்தான். தன்னைத் தடுத்த இலங் கணியைக்கொன்றொழித்தான். இலங்கையில் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டு வெற்றியுடன் மீண்டு தன்னு டையதுணைவர்கள் தங்கியிருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.



தன்னுடைய துணைவர்களிடத்திலே தான் இலங் -கைக்குப் போய்ச்சீதாபிராட்டியைக் கண்டு கணையாழி பெற்று வந்ததை மட்டுங் கூறினானே தவிர இலங்கையைச்சுட்டெரித்ததையும் அரக்கர்களை அழித்தொழித்ததையும் சொல்லவில்லை. அநுமான் தன்னுடைய வெற்றிமுதலியவைகளைச் சொல்லாததற்குக் காரணம், அவைகளைச் சொல்லுவதால் எத்தகைய பயனும் ஏற்படப்போவதில்லை என்னும் எண்ணமேயாம். "ஒருவன் சொல்லத் தொடங்கினால் பயனுடைய செய்திகளைக் கூறுக; பயனில்லாத செய்திகளைக் கூறற்க, என்று முன்னோர்கள் கூறிய அறமொழி அன்று அநுமா னிடத்திலே நன்றாகவிளங்கியதை எல்லோரும் உணர்ந்து கொண்டார்கள். அநுமான் சொல்லாதொழிந்தாலும் அவ னுடையவெற்றிகளை வானர வீரர்கள் ஒருவாறு உணர்ந்து கொண்டார்கள்.

[பயனில கூறுமை]

(இராமாயணம்)